# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | | |
|---|---|---|
| Miscellaneous case No: | : | S.C. No. 96/ 2021 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness of | : | P.W. 6 |
| Name | : | அனிதா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2026.

--------

1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல்துறையில் தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளேன். கடந்த 10.09.2020ம் தேதிய செக்காணூரனி வட்ட காவல ் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மேற்படி காவல் நிலைய கு.எண்.378-2018, பிரிவுகள் 4(1) (A), 4(1) (aaa) of TNP Act மற்றும் 328 இதச வின் கீழான வழக்கு கோப்பை பார்வையிட்டு எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை செய்தததில் முதல் கட்ட விசாரணை அதிகாரியால் எதிரிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வழக்கின் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, அவற்றை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றும், எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்காக புலன் விசாரணையிலிருந்து மேற்படி வழக்கின் சாட்சிகளை நான் விசாரித்தபோது முதற்கட்ட விசாரணை அதிகாரியிடமிடம் கூறியதுபோன்று என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவு

செய்யவில்லை. இவ்வழக்கின் எனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்கு மூலங்களிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரிகள் மீது 10.09.2020ம் தேதி பிரிவுகள்

4(1) (A), 4(1) (aaa) of TNP Act மற்றும் 328 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆவணங்களை சரிபார்த்து தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் மதுவிலக்கு ரோந்திற்காக சென்றேன் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் பாலூத்துப்பட்டி வடக்கம்பட்டி சுடுகாட்டிற்கு அருகில் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்யும்போது விஷ சாராய வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் வழக்கை பதிவு செய்தவர் எதிரிகளை கைது செய்து பாட்டில்களை கைப்பற்றும்போது வாடை வந்தது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். உயிருக்கு ஏற்பட்டுவிடுமோ என்று சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தை காட்டக்கூடிய மகஜர் மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஊரில் வசிக்கின்ற எந்த நபரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், சாட்சி அளிக்க முன்வரவில்லை. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். விஷ சாராயம் குடித்து ஊர் மக்கள் யாராவது மருத்துவமனையில் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதாக சாட்சியம் பதிவு செய்தேனா என்றால் அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை. சாட்சியங்கள் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மதுவில் அட்ரோபின் கலந்துள்ள நிலையை பற்றி பகுப்பாய்விற்கு அனுப்பி அறிக்கை பெற்றபின்பு தான் முடிவுக்கு வரமுடியும் என்றால் சரிதான். எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்படும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை சார்ந்த எந்த கடையில் வாங்கியது என்ற குறிப்பு வழக்கில் இடம்பெறவில்லை என்றால் சரிதான். புள்ளி விவரக் கணக்கிற்காக

நிலையத்தில் ஆவணங்கள் தயாரித்து பொய்யாக போடப்பட்ட வழக்கை அப்படியே ஏற்று எதிரிகள் மீது ஒருதலைபட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி-கள் முன்னிலையில் என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.13 14:59:44 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.